**செ. கு. எண்:042** **நாள் :06.02.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6.2.2016

29.11.2015 அன்று சென்னை பெருநகர காவல், மடிப்பாக்கம் காவல் நிலைய போக்குவரத்துப் பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. V.பாலமுருகன்;

10.12.2015 அன்று திருச்சிராப்பள்ளி மாநகரம், கோட்டை போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. J.ஆரோக்கியதாஸ்;

11.12.2015 அன்று ராமநாதபுரம் மாவட்டம், தனுஷ்கோடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. முனியசாமி;

16.12.2015 அன்று கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. R.பாஸ்கரன்;

29.12.2015 அன்று திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. கார்த்திகேயன்;

கடலூர் மாவட்டம், நடுவீரப்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. K.சண்முகம்;

––– ஆகியோர் சாலை விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

24.12.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு நகர போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்த திரு. G.சிவகுமார்;

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. N.திருவேங்கடம்;

25.12.2015 அன்று வேலூர் மாவட்டம், அணைகட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. N.சந்திரசேகர்;

29.12.2015 அன்று திண்டுக்கல் மாவட்டம், மாவட்ட தனிப் பிரிவில் (District Special Branch) தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. P.தாமோதரன்;

அரியலூர் மாவட்டம், செந்துறை காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்த திரு. M.எழிலழகன்;

திருவள்ளூர் மாவட்டம், ஆரணி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. M.மனோகரன்;

1.1.2016 அன்று சேலம் மாவட்ட போதை பொருள் நுண்ணறிவு பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்த திரு. N.பக்ருதீன்;

2.1.2016 அன்று மதுரை மாவட்டம், ஊமச்சிக்குளம் போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்த திரு. காசி;

--- ஆகியோர் உடல்நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **14** காவலர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**